RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI:10.34256/irjt21441

OPEN ACCESS

# தெய்வ வழிபாட்டில் உருவ வழிபாட்டு வளர்ச்சி

ப. பிரியா [அ, *], இரா. சசிகலா [அ]

[அ] தமிழ்த்துறை, பிரிஸ்ட் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், இந்தியா

# The Growth of Idolatry in Deity Worship

P. Priya [a, *], R. Sasikala [a]

[a] Department of Tamil, Prist University, Vallam, Thanjavur, India

* Corresponding Author:
priyaprist@gmail.com

Received: 03-07-2021
Revised: 29-09-2021
Accepted: 12-10-2021
Published: 30-10-2021

## ABSTRACT

The worship of God originated from the belief that man who was afraid of the power of nature could be saved from suffering by worshipping nature. Initially, man started worshipping the dead out of fear of thunder, lightning, animals and fire, but in course of time he started worshipping the dead. With the passage of time, the stage of giving shape to the dead has evolved. That is the reason for the origin of 'Nadukal worship'. The Nadukal cult paved the way for the emergence and growth of idol worship later. The cult which had developed in ancient times had a pantheistic status during the Sangam Age. In the history of the world, two divisions of the pantheon, the worship of the great deity and the cult of the folk deities, began to grow through the orthodox contact. The traditional pantheon cult developed into a planned temple structure and iconography and the cult of folk deities developed in accordance with the culture and customs of the locality without any planned rules. Folk deity worship has elements such as unplanned cult and lack of proper temple structure. This essay is intended to explain the transformation of the form in the worship of the minor deities after the transition of the orthodox iconography.

**Keywords:** God, worship, Nadukal worship, Sangam Age

## முன்னுரை

உலகில் மனித இனம் தோன்றிய நாள் முதல் அவனுடைய சீரிய சிந்தனையின் விளைவாகக் காலந்தோறும் வளர்ச்சி நிகழ்ந்து வருந்துள்ளது. பண்டைய மனிதன் தன்நிலைப்பாட்டையும் தான் வாழ்கின்ற சூழலையும் ஆராயத் தொடங்கினான். அவனால் நிகழ்கின்ற எல்லாவற்றுக்கும் காரணத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை. எதிர்பாராத நிகழ்வுகளில் மனச்சோர்வுற்ற அவன் தனக்குமேல் பெரிய சக்தி இருப்பதை உணர்ந்தான். எனினும், அதை இதுதான் என்று அவனால் இனம்காண முடியவில்லை. அதனால் தன்முன் பிரம்மாண்டமாகப் பரந்து விரிந்திருக்கும் வானம்-கோள்கள்- பெரிய மரங்கள்-மலை-நீர்நிலைகள் இவற்றை வழிபடத் தொடங்கினான். தொடக்கக் கால வழிபாட்டு முறை இயற்கை சார்ந்ததாக அமைந்தது. தமிழ்மொழியில் அமைந்திருக்கும் பண்டை இலக்கியமான சங்க இலக்கியத்தில் மலை, நீர்நிலை, மரம் முதலியவை வழிபாட்டுக்கு உரியனவாக இருப்பதினின்று இதனை அறிய இயலும்.

குறிஞ்சிநிலப் பெண்கள் மலையை வழிபட்டுள்ளனர் என்பதை அகநானூறு பாடல் மூலம் அறியமுடிகின்றது (Venkadamay Nattar, 2019).

“தேன் தேர் சுவைய திரளரைமா அத்து
கோடைக்கு ஊழ்த்த கமழ் நறுந்தீங்கனி
பயிர்ப்புறப் பிலவின் எதிர்சுளை அளை,
இறாலொடு கலந்த வண்டுமூசு அரியல்
நெடுங்கண் சூடமை பழுநி கடுநீதிறல்
பாம்புக் கடுப்பன்ன தோப்பி ஒச்சி குறவ
முறித்தழை மகளிர் மடுப்ப மாந்தி
அடுக்கல் ஏனல் இரும்புனம் மறுத்துழி”

“வழிபாடு என்பது சிந்திக்க தொடங்கிய மனிதனின் முதல் செயல்பாடு ஆகும். இயற்கையின் பேராற்றல்களை உற்று நோக்கிய மாந்தர் இனம் அதன் விளைவுகளுக்கு அஞ்சியது. தீய விளைவுகளில் இருந்து தன்னைக் காத்துக் கொள்வதற்கு இயற்கையை வணங்கியது. பிறப்பிலிருந்து இறப்பு, இயற்கை மாற்றங்கள், சீற்றங்கள், பருவ மாறுதல்கள், ஒலி, ஒளி, மழை என்று அனைத்தும் பண்டைய மனிதனுக்குப் பலவற்றைக் கற்றுக் கொடுத்தன. ஆகவே, இவற்றை இயக்கும் ஆற்றலை மனிதன் வணங்கினான்” என்பர் (Selvarasu, 2010).

தொடக்கக் காலத்தில் இயற்கையோடு இணைந்ததாக இருந்த வழிபாட்டுமுறை காலப்போக்கில் உருவ வழிபாடாகப் பரிணமித்தது. சிறுதெய்வ வழிபாக ஒருபுறமாகவும், பெருந்தெய்வ வழிபாட்டுமுறை ஒரு புறமாகவும் வளரத் தலைப்பட்டன. அவ்வாறான வழிபாட்டு வளர்ச்சி மிகவும் நுட்பமானது ஆகும்.

பண்டைக் காலம் முதலாகத் தோன்றி வளர்ந்து வரும் வழிபாட்டுமுறை கீக்கண்ட நிலைப்பாடுகளைத் தன்னகத்தே கொண்டதாகத் திகழ்கிறது.

“வாழுகின்ற அல்லது இறந்துபோன மனிதர்கள், விலங்குகள் போன்றோரின் ஆவிகள் அல்லது ஆன்மாக்கள் போன்றவற்றில் நம்பிக்கை வைத்தலும் அவற்றை வழிபடுத்தலும் சிறப்பாக இறந்தோரையும், மூதாதையரையும் வழிபடுதல், பொருள்களில் உறையும் ஆவிகளில் நம்பிக்கை வைத்தலும் வழிபடுதலும்” என்கிறார் ஜமுனாராணி.

## நாட்டுப்புறத் தெய்வ வழிபாட்டின் தோற்றம்

நாட்டுப்புறத் தெய்வ வழிபாடு மனிதனின் முன் விரிந்து கிடந்த இயற்கையின் தோற்றம் பெற்று, குகை ஓவியங்களின் மூலமும் குறியீடுகளின் மூலமும் பின் நடுகற்களின் மூலமும் குறியீடுகளின் மூலமும் பின் நடுகற்களின் மூலமும் நிலைபெற்றிருக்க வேண்டும். குறிப்பாகச் சொல்லப்போனால் சிறுதெய்வ வழிபாட்டின் தொடக்கம் அச்சத்தின் காரணமாகத் தோற்றம் பெறினும் காலப்போக்கில் மனித இனத்தின் தொன்மத்தின் அடையாளமாக நாட்டுப்புறத் தெய்வ வழிபாடு நிலைபெற்றது, என்று கூறலாம். நாட்டுப்புறத் தெய்வ வழிபாட்டில் மனிதர்கள் தெய்வமானார்கள்.

இயற்கை வல்லமை படைத்த தெய்வமாகக் கருதப்பட்டது. இதற்குக் காரணம் மனிதன் தான் சார்ந்திருந்த வாழ்வியல் சூழலே காரணம்.

நாட்டுப்புறச் சமய மரபு வைதீகச் சமயத்தைப் போலக் கடவுகளை மையமாகக் கொண்டதாக இல்லாமல் மனிதனை மையமாகக் கொண்டதாக விளங்குகிறது. மேலும், நாட்டுப்புற வழிபாட்டு முறைகள் வீடுபேற்றை அல்லது மோட்சத்தை நோக்கமாகக் கொண்டவையாக இல்லாமல் இப்பூவுலக வாழ்க்கை நலனை நோக்கமாகக் கொண்டவை. வைதீகச் சமயத்தில் தெய்வத்திற்கும் மனிதனுக்கும் உள்ள இடைவெளி அதிகமாக இருக்க நாட்டுப்புற சமயத்தில் மனிதர் தெய்வத்தைக் கட்டளையிடுகின்ற அளவுக்கு நெருக்கமான உறவுடையவராக இருக்கிறார். நாட்டுப்புறச் சமய வழிபாட்டில் தனிமனித அந்நியமாதல் உணர்வை நீக்குவதற்கான கூட்டுணர்வு அதிகமிருக்க வைதீகச் சமய வழிபாட்டின் அந்நியமாதலை அதிகப்படுத்துகின்ற தனிமனித உணர்வு ஓங்கியிருக்கிறது.

நாட்டுப்புறத் தெய்வ வழிபாட்டுமுறை அச்சத்தின் காரணமாகத் தோற்றம் பெற்று மனித இனத்தின் அடிப்படை மக்களின் தொடர்பினால் நிலைபெற்று வளர்ந்து பண்டைய மக்களின் வாழ்வில் நிறைந்திருந்த தொன்மக் கூறுகளை அறிந்துகொள்ளப் பயன்படுகிறது (Thangaselvi, 2010). காலம் காலமாக இருந்துவரும் வழிபாட்டு முறையில் பெருந்தெய்வ மரபு, சிறுதெய்வ மரபு என இரு வழிபாட்டு மரபுகள் தோன்றி நிலைபெற்றுள்ளன. பண்டைத் தமிழ் இலக்கியங்களில் இறைவழிபாடு வழிபாட்டின் தோற்றம் குறித்த தரவுகள் காணப்படுகின்றன. தொல்காப்பிய இலக்கணநூல் முதல், கரு, உரி பொருள்களை விளக்கமாகக் கூறும் இடத்து கருப்பொருள்களை,

“தெய்வம் உணாவே மாமரம் புள்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவும் கருதவன மொழிப”

என்னும் நூற்பாவில் குறிப்பிடும்போது நிலத்திற்குரிய தெய்வத்தைக் கருப்பொருளில் கொண்டு வருகிறது. ஒவ்வொரு நிலத்திலும் இருந்த தெய்வ வழிபாட்டுமுறை,

“மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையின் சொல்லவும் படுமே”

என்னும் நூற்பாவால் விளக்கப்படுகிறது (Subramaniyan, 2009). சங்க காலத்திலேயே பெருமரபு தோற்றம் பெற்றமைக்கு மேற்கண்ட நூற்பா எடுத்துக்காட்டாக அமைகிறது. குறிஞ்சிக்கு முருகனும், முல்லைக்குத் திருமாலும், மருதத்திற்கு இந்திரனும், நெய்தலுக்கு வருணனும் தெய்வங்களாக இருந்தனர் என்பதை அதன் பொருள். ஆனால், இத்தெய்வ வழிபாடுகளில் எல்லாம் இன்று பாரம்பரிய வழிபாட்டு முறையில் அமைந்துள்ளன. ஆனால் அதே சங்க இலக்கியப் பாக்களில் நடுகற்களில், மரங்களில்

தெய்வத்தை இருத்தி வழிபட்ட மரபும் காணக் கிடைக்கின்றது. ஆக, சங்க காலத்திலேயே பெருந்தெய்வ மரபும், சிறுதெய்வ மரபும் வலிமையாகக் கால்கொண்டு விளங்கியமை புலப்படும்.

## நடுகல் வழிபாடு

தமிழ்மொழியின் பண்டைய இலக்கியமான புறநானூற்றிலும் பிற சங்க இலக்கியங்களிலும் நடுகல் வழிபாடு குறித்த செய்திகள் விரிவாக பேசப்பட்டுள்ளன. இயற்கை வழிபாட்டோடு மக்கள் இறந்துபோன தம் முன்னோர்களையும் தாய் தந்தையரையும் வழிபடத் தொடங்கினர். அவர்களை அடக்கம் செய்த இடங்களில் கல் நட்டு அக்கல்லில் அவர்கள் உறைவதாக நினைத்து அக்கற்களுக்கு அலங்காரம் செய்தும் பலி கொடுத்தும், விழா எடுத்தும் வழிபடத் தலைப்பட்டனர். நடுகல் அமைக்கப்பட்ட முறையினைத் தொல்காப்பியம்,

"காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்

சீர்த்த மரபில் பெரும்படை வாழ்த்தலென்று

இருமூன்று மரபிற் கல்லொடு புணரச்

சொல்லப்பட்ட எழுமூன்று துறைத்தே"

என்று குறிப்பிடுகிறது. நடுகல்லின் மீது நடுகல்லுக்கு உரியவரின் சிறப்புகளும் பெருமைகளும் எழுதப்பட்டது. போரில் எதிரிகளை எதிர்த்து நின்று மார்பில் புண்பட்டு இறந்த பெரும் வீரனின் நினைவாக நடுகற்கள் ஊன்றப்பட்டன. நடுகல் வணக்கமும் நிகழ்ந்தது. காலப்போக்கில் அதுவே நிலைத்த வழிபாட்டு முறைக்கும் வழிகோலியது. உயர்ந்தோர்களுக்கும் அறவோர்களுக்கும் புரவலர்களுக்கும் வீரர்களுக்கும் நடுகல் நடப்பட்டு சிறப்புச் செய்தமையினைப் புறநானூற்றுப் பாக்கள் எடுத்துக் காட்டுகின்றன (Puliyur Kesigan, 2010).

"நடுகல் ஆயினன் புரவலன் எனவே"

"பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்"

"படை நடுகல்லின் நாட்பலி ஊட்டி"

நடுகல் வழிபாடு பின்னாளில் நிலைத்த வழிபாட்டு மரபுக்கு வித்திட்டது எனலாம்.

## தெய்வங்களின் உருவ அமைப்பு

எங்கும் நிறைந்துள்ள இறைச்சக்திக்கு என்றும் உருவம் கற்பிக்கப் பண்டைத் தமிழர் முனைந்ததில்லை. "கடவுள் வழிபாட்டிற்கு குரிய கோயில்களில் ஆதி காலத்தில் கடவுளின் உருவங்களை வைத்து வணங்கவில்லை"

இயற்கையை நோக்கிய வழிபாடும், பலி முறைகளுமே மேற்கொள்ளப்பட்டன. நாட்கள் செல்லச் செல்ல இயற்கைக்கும் மனிதனுக்கும் இடைவெளிகள் அதிகமானபோது, இயற்கையோடு நேரடித் தொடர்புகொள்ள இயலாத நிலையில் உருவ வழிபாட்டின் தோற்றம் கால்கொள்ளத் தொடங்கியது. எண்ணெய் இட்ட சிறுகற்கள்

உருவ வழிபாடு இக்காலத்தில்தான் தொடங்கியிருக்க வேண்டும். புராணம் புகுந்த தொடக்கக் காலத்தில் ஒவ்வொரு தெய்வத்திற்கும் பல உருவங்கள் நிர்ணயிக்கப்பட்டன. அவ்வாறு தோன்றியவையே சக்கரமும் திரிசூலமும் ஆகும். திருமாலுக்குச் சக்கரத்தையும், சிவனுக்குத் திரிசூலத்தையும், பின்னர் லிங்கத்தையும் வைத்து வழிபட்டனர்" என்பர் (Shanmugasundaram, 1975).

புராண காலத்தில், கண்ணுக்குத் தெரியாமல் உருவமும் இல்லாமல் அண்ட வெளியில் கலந்திருக்கிற பரம்பொருளின் திருமேனியே ஆகாயம் என்றும், திசைகள் அவருடைய திருக்கைகள் என்றும் உருவம் கற்பித்தனர். நான்கு திசைகளைக் குறிக்க நான்கு கைகளும், எண்டிசைகளைக் குறிக்க எட்டுத் திருக்கரங்களும், எட்டோடு மேல், கீழ் ஆகியவற்றைச் சேர்ந்துக் குறிக்கப் பத்து கைகள் எனவும் உருவங் கற்பித்தனர். சைவக் கோயில்களில் சிவ உருவம் இலிங்கம் வடிவமேயாகும். இலிங்கும் மூன்று பகுதிகளை உடையது இலிங்கம், பீடம், ஆவுடையார் இம்மூன்றும் மருந்தினால் கட்டப்பட்டு உருவமாக்கப்பட்டுள்ளது என்று தல புராணம் கூறுகிறது.

## சிறுதெய்வ வடிவங்கள்

சைவ வைணவ மூர்த்திகளைக் கண்ட பிறகே சிறுதெய்வங்களுக்கு உருவம் கற்பிக்க முற்பட்டனர் என்பர்

1. எண்ணெய் இட்ட சிறுகற்கள்
2. சிறு சதுரமான மண்பீடங்கள்
3. சில பீடங்களில் முகம் மட்டும் அமைந்திருக்கும்
4. சில பீடங்களில் முழு உருவமும் செய்யப்பட்டிருக்கும். இவ்வுருவம் கல்லாலோ அல்லது மண்ணாலோ அல்லது மரத்தாலோ ஆக்கப்பட்டிருக்கும்.
5. சில ஒட்டுச் சிலைகளையும் விழாக்காலங்களில் கொணர்வர். இச்சிலைகள் (இசக்கியம் மன் பேச்சியம்மன் போன்ற பெண் தேவனை- களுக்கு உரியது) எனச் சிறுதெய்வ வடிவங்கள் விரையறுக்கப்- பட்டுள்ளன. சூலம் வைத்து வணங்கப்படும் கடவுளே மிகுதி. சூலம் மூன்று வடிவின. சூல உருவம், காளியம்மன், மாரியம்மன், பிடாரி, பேச்சியம்மன் முதலான கடவுளர்களின் உருவமாக மதிக்கப்படுகிறது. எண்ணெயிட்ட சிறுகற்கள் உருவமும் பல தெய்வங்களுக்குரிய வடிவமாகக் கொள்ளப்பட்டுள்ளது. கன்னி கோயில்களில் ஏழு கன்னிகளைக் குறித்த ஏழு கற்கள் நடப்பட்டுள்ளன. சூல வடிவக் கடவுளில் அனைத்திற்கும் சூலத்தின் கீழ் கற்கள் புதைக்கப்பட்டுள்ளன. காளியம்மன், மாரியம்மன், அங்காளம்மன் முதலான தெய்வங்களுக்கு முழு உருவக் கருங்கற் சிற்பங்களும் உண்டு. இது வேதமுறைப்படி அமைந்த கோயில்களில் காணப்படுகிறது. கோயில் உருவச்சிலைகள், பொதுவாக கற்கள், மண், மரம், உலோகம் என்ற பொருள்களால் ஆக்கப்பட்டவை எனலாம்.

## முடிவுரை

இயற்கைக்கு அஞ்சிய மனிதன் அதில் இருந்து தன்னைக் காத்துக்கொள்ள வழிபாட்டைத் தோற்றுவித்தான் என்பதை அறியமுடிகின்றது. சங்க கால வழிபாட்டு முறையைப் பொருத்தவரை ஆகம விதிகளுக்கு உட்படுத்தப்- படவில்லை என்பதை இலக்கியம் வாயிலாக அறிய முடிகின்றது. வழிபாடுகளுக்கு ஏற்ப சிறுதெய்வம், பெருந்தெய்வம் எனத் தெய்வங்கள் வகைப்படுத்தப்பட்டன. வைதீகச் சமயத்தில் ஏற்பட்ட உருவ வளர்ச்சியாலே, சிறுதெய்வ வழிபாட்டிலும் உருவ அமைப்பு என்பது தோற்றம் பெறலாயிற்று. மூதாதையருக்கு நன்றிக்கடன் செலுத்துவதற்காக தோற்றம் பெற்றதே நடுகல் வழிபாடு என்பதை அறியமுடிந்தது.

## References

Puliyur Kesigan, (2010) Purananuru Moolamum Uraiyum, Saratha Pathipagam, Chennai, India

Selvarasu, N. (2010) Nattupura Samayam (Thonmangal-Valipadukal-Sadangukal) Kaviya publications, Chennai, India

Shanmugasundaram, S. (1975) Nattupuraviyal Oor Arimugam, Ilakiya Manavar Veliyedu, Chennai, India

Subramaniyan. S.V. (2009) Tholkapiyam Ilampuranar Urai, (Eluthu- Sol- Porul) Meyyapan Pathipagam, Chidambaram, India

Thangaselvi, K. (2010) Nattupura Pen Theiva Valipadukal – Oor Aivu, Doctoral Dissertation, Madurai Kamaraj University, Madurai, India

Venkadamay Nattar, N.M. (2019) Agananuru, Gowra publications, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author's has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2021. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License